Greetings from Auroville

..a universal city in the making in south-India

எல்லா நாடுகளையும் சேர்ந்த ஆண்களும் பெண்களும் மதக்கோட்பாடுகளையெல்லாம், அரசியல் ஈடுபாடுகளையெல்லாம், நாட்டுப்பற்றுகளையெல்லாம் தாண்டி, அமைதியிலும் மேன்மேலும் முன்னேறும் இசைவிலும் வாழக்கூடிய ஒரு சர்வதேச நகரமாக இருக்க ஆரோவில் விரும்புகிறது. மனிதகுல ஒருமைப்பாட்டை உண்மையாக்குவதே ஆரோவில்லின் நோக்கமாகும்.

*ஸ்ரீ அன்னை, 8.9.1965*

# ஆரோவில்லைப் பற்றிய சுருக்கமான தகவல்

### ஆரோவில் என்றால் என்ன?

ஆரோவில் ஒரு சர்வதேச நகரம். இங்கு உலகெங்கிலுமிருந்து 50,000 பேர் வசிப்பதற்காக இந்நகரம் அமைக்கப்பட்டு வருகின்றது.

### ஆரோவில் எவ்வாறு தொடங்கப்பட்டது?

1930ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில், ஆரோவில் என்ற கருத்துரு – மனிதஇன ஒருமைப்பாட்டின் பரிசோதனைக்குரிய ஓர் இலட்சிய நகரமாக ஸ்ரீ அன்னையின் அககாட்சியில் தோன்றியது. 1960ஆம் ஆண்டுகளின் மத்தியில் ஸ்ரீ அரபிந்தோ சொசையிட்டி, பாண்டிச்சேரி, அத்தகைய நகரத்தைத் தொடங்வேண்டும் என்று யோசைன கூறியது. ஸ்ரீ அன்னை அதை ஆசிர்வதித்தார். அதன்பிறகு, இக்கருத்துருவானது இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு தனது ஆதரவை வழங்கியதுடன் யுனெஸ்கோவின் பொது அவைக்கும் எடுத்துச் சென்றது. 1966ல் யுனெஸ்கோவில் ஒருமனதாக தீர்மானம் இயற்றப்பட்டது. அதில், வருங்கால மனிதஇனத்திற்கு இது முக்கியமான ஒரு திட்டம் ஆகும் என்று தெரிவித்து, அதன் முழு ஊக்கத்தையும் அளித்தது.

### ஆரோவில் ஏன்?

வேற்றுமையில் – மனிதஇன ஒற்றுமையைக் காண்பதே ஆரோவில்லின் நோக்கமாகும். மனிதஇன ஒற்றுமை, உள்ளுணர்வின் திவ்யமாற்றம் ஆகியவற்றை பரிசோதித்துப் பார்க்கும் இடமாகவும், நீடித்தவளர்ச்சிக்காக வாழ்தல், மனிதஇனத்தின் எதிர்கால பண்பாடு, சுற்றுச்சூல், சமூக மற்றும் ஆன்மிகத் தேவைகள் ஆகியவற்றை நடைமுறையில் ஆராய்ந்துப் பார்க்கும் முதல் மற்றும் ஒரே நகரம் இன்றைக்கு ஆரோவில் மட்டுமே என்று பன்னாட்டு அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### ஆரோவில் எப்போது தொடங்கப்பட்டது?

28.02.1968 அன்று எதிர்கால நகரத்தின் மையத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் கலந்துகொள்வதற்காக 124 நாடுகள் மற்றும் இந்தியாவின் எல்லா மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட சுமார் 5,000 பேர் கூடியிருந்தனர். பிரதிநிதிகள் தங்கள் நாடுகளிலிருந்து கொண்டுவந்த மண்ணை தாமரை வடிவ வெண்ணிறத் தாழியில் இட்டனர். இப்போது ஆம்பித்தியேட்டரில் அது முக்கிய இடமாக உள்ளது. அதேநேரத்தில், ஸ்ரீ அன்னை அவர்கள் ஆரோவில்லிற்கு 4-அம்ச சாசனத்தை வழங்கினார்.

### ஆரோவில் எங்கே உள்ளது?

தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில் (பெரும்பாலான பகுதிகள் தமிழ்நாட்டிலும் சில பகுதிகள் புதுச்சேரியிலும்), கிழக்கு கடற்கரையில் இருந்து ஒருசில கிலோமீட்டர் தூரத்திலும், சென்னைக்கு தெற்கே சுமார் 160 கி.மீ. தூரத்திலும் புதுச்சேரிக்கு வடக்கே 10கி.மீ. தூரத்திலும் ஆரோவில் அமைந்துள்ளது.

### ஆரோவில்வாசிகள் என்பவர்கள் யார்?

45 நாடுளில் இருந்து இங்கு வசிக்கும், குழந்தைகள் முதல் பெரியவர் வரை, எல்லா சமூக, பண்பாடு ஆகியவற்றின் பின்னணியைக் கொண்ட மனிதஇனத்தின் பிரதிநிதியாகத் திகழ்கின்றார்கள். இந்நகரின் மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இப்போது மொத்தம் 2,160 பேர் வசிக்கின்றனர். அவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் இந்தியர்கள்.

# நகரத் திட்டம் ஒரு பார்வை

## அமைதிப் பகுதி, நகர மண்டலங்கள் & பசுமை வளையம்




### அமைதிப் பகுதி

நகரின் மையத்தில் அமைதிப் பகுதி அமைந்துள்ளது. மாத்ரிமந்திர், அதன் தோட்டங்கள், மனிதஇன ஒற்றுமையின் சின்னமாகத் திகழும் தாமரை மொட்டுவடித் தாழியுள்ள ஆம்பித்தியேட்டர் ஆகியவை அமைதிப் பகுதியாகும். அத்தாழியில் 121 நாடுகள், 23 இந்திய மாநிலங்களின் மண் வைக்கப்பட்டுள்ளது. அமைதி, சாந்தம் ஆகிய சூழலை உருவாக்கவும், நிலத்தடி நீரைப் புதுப்பிக்கவும் ஓர் ஏரி.

### தொழிற்கூட மண்டலம்

109 ஹெக்டேர் பகுதியில், அமைதிப் பகுதியின் வடக்கே, தொழிற்கூட மண்டலம், ஒரு “பசுமை வளத்திற்கு“ ஊறுவிளைவிக்காத பகுதி உள்ளது. ஆரோவில் ஒரு தன்னிறைவு பெற்ற நகரமாகத் திகழுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் சிறு மற்றும் நடுத்தர அளவு தொழிற்கூடங்கள், பயிற்சி மையங்கள், கலைகள் மற்றும் கைவினைகள், நகர நிர்வாகம் ஆகியவை அமைந்துள்ளன.

### குடியிருப்பு மண்டலம்

இந்நகரத்தின் நான்கு மண்டலங்களில் மிகப்பெரிய மண்டலம் இது. 189 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகளின் எல்லையில் பூங்காக்கள் அமைந்துள்ளன. கிரவுன் ரோடு என்படும் வட்டச் சாலை வழியாக வந்து ரேடியல் ரோடு எனப்படும் ஆரச் சாலைகள் வழியாக போக்குவரத்து பிரிக்கப்படுகின்றன. அவை இம்மண்டலத்தை பல பிரிவுகளாகப் பிரிக்கின்றன. தனிநபர் மற்றும் கூட்டாக வசிப்பதற்கு ஏற்ற வகையில் இம்மண்டலத்தில் வீ டுகள் அமைக்கப்படுகின்றன. இப்பகுதியில் 55% மட்டுமே பசுமைப்பகுதியாகும். எஞ்சியுள்ள 45% பகுதியில், கட்டிடங்கள் அமைந்து, இயற்கையோடு இயைந்த நகரம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

### பன்னாட்டு மண்டலம்

பன்னாட்டு மண்டலம் அமைதிப் பகுதிக்கு மேற்கே 74 ஹெக்டேர் பரப்பில் அமைந்து வருகின்றது. கண்டங்கள் வாரியாக பல்வேறு தேசிய, பண்பாட்டு அரங்கங்கள் இங்கே அமைக்கப்பட்டு வருகின்றன. வேற்றுமையில் மனிதகுல ஒற்றுமையுடன் மனிதகுலம் வாழுவதற்கு ஒரு உதாரணமாக இவைத் திகழும். மேலும் மனிதகுலத்திற்கு ஒவ்வொரு நாடும் அளித்துள்ள அறிவார்ந்த விஷயங்களையும் அர்ப்பணிப்பையும் இவை வெளிப்படுத்தும்.

### பண்பாட்டு மண்டலம்

93 ஹெக்டேர் பரப்பளவில் பண்பாட்டு மண்டலம் அமைந்திட திட்டமிடப்பட்டுள்ளது. இது அமைதிப் பகுதிக்கு கிழக்கே அமைந்துள்ளது. பயனுள்ள கல்வி ஆராய்ச்சிக்குரிய இடமாகவும் படைப்புகளை வெளிப்படுத்தும் இடமாகவும் பண்பாட்டு

மண்டலம் திகழும். பண்பாடு, கல்வி, கலை, விளையாட்டு செயல்பாடுகளைச் செய்வதற்கான வசதிகள் இங்கே செய்யப்படும்.

**பசுமை வளையம்**

நகரப்பகுதியின் ஆரம் 1.25 கி.மீ. நீளமாகும். இதைச் சுற்றி பசுமை வளையம் அமைந்து வருகின்றது. இயற்கைமுறை பண்ணைகள், பால் பண்ணைகள், பழத்தோட்டங்கள், காடுகள், வனவிலங்குகள் ஆகியவற்றிற்கான மண்டலம் இது. இந்நகர ஆக்கிரமிப்பை இவ்வளையம் தடுப்பது மட்டுமில்லாமல், பல்வேறு வகையான வனவிலங்குகளுக்கு இருப்பிடமாகவும் இது திகழ்கிறது. உணவு, மரம், மருந்துகள் முதலானவற்றை அளிக்கும் ஆதாரமாகவும், பொழுபோக்கிற்கான ஓரிடமாகவும் இப்பகுதி திகழ்கிறது.

தற்போது பசுமை வளையத்தின் பரப்பு 405 ஹெக்டேர் – இன்னும் முழுமை பெறவில்லை என்றாலும் – வறண்ட நிலத்தை பசுமைநிறந்த ஓர் உற்சாகமிகு சுற்றுச்சூழல் முறைமையாக மாற்றுவதில் வெற்றி பெற்றுள்ளதற்கு ஓர் உதாரணமாக விளங்குகிறது. மேலும் 800 ஹெக்டேர் நிலத்தில் இத்திட்டத்தை விரிவுபடுத்தவும், அதில் மண் மற்றும் தண்ணீர் பாதுகாப்பு நிலத்தடி நீரை ஏற்றுதல், சுற்றுச்சூழல் மீட்பு ஆகியவற்றிற்கு ஓர் அருமையான மாதிரியாகத் திகழ்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நகரத்தின் நுரையீரலாகத் திகழும் இப்பகுதி, இத்திட்டத்தை நிறைவேற்றியதும், முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கப்பட்ட மண்வள மீட்புப்பணியானது பூர்த்தியாகும்.